



Signature Not Verified
Signed by: Joint Director
Location:Vellore
Date:2023.04.0? 11:28:34

# நகர் ஊரமைப்பு துறை

## குடியாத்தம் ஊராட்சி ஒன்றியம்

## உள்ளி ஊராட்சி / கிராமம்,

**வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம் / ஊராட்சி ஒன்றியம், உள்ளி ஊராட்சி / கிராமம், சர்வே எண்கள். 20/1சி1பி, 1சி1சி, 23/5எ2, 5பி மற்றும் 23/5சி–ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.**

இணையதள விண்ணப்பம் எண் : C94XF7FJ
அளவு : 1 : 400
கோப்பு எண் : VLR / C94XF7FJ / 033 - 2023

வ

**குறிப்பு :**

| | | | |
|---|---|---|---|
| மனைப்பிரிவின் பரப்பு | : | 10432.00ச.மீ. (அ) 2.58 ஏக்கர் | |
| கோரிய மனைகள் | : | 60 | |
| ஒதுக்கிய மனைகள் | : | 56 | |
| மனைப்பிரிவின் எல்லை | : | | |
| நிலையிலுள்ள சாலை | : | | |
| EWS மனைகளின் மொத்த பரப்பு (மனை எண்கள் : 29–37, 43–48 ) | : | 800.30 ச.மீ. | - 10.57 % |

**பொது ஒதுக்கீடு :**

உத்தேச சாலை :

மனைப்பிரிவின் பரப்பு : 10432.00 ச.மீ. (அ) 2.58 ஏக்கர்

மனைப்பிரிவில் அமையும் உத்தேச சாலைகளின் பரப்பு : 2901.70 ச.மீ.

: மனைப்பிரிவின் மொத்த பரப்பு – உத்தேச சாலைகளின் பரப்பு

( 10432.00 ச.மீ. – 2901.70 ச.மீ. ) = 7530.30 ச.மீ.

**உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை :**

| | | | |
|---|---|---|---|
| பூங்கா | : | 761.40 ச.மீ. | - 10.11 % |
| பொது உபயோகம் (PP) | : | 45.00 ச.மீ. | - 0.59 % |
| TANGEDCO ஒதுக்கீடு | : | 45.00 ச.மீ. | - 0.59 % |

| உத்தேச சாலை | மூலை முடக்கு |
|---|---|
| 10.00 மீ சாலைகளுக்கு | 1.50 x 1.50 மீ. |
| 9.00 மீ சாலைகளுக்கு | 1.50 x 1.50 மீ. |
| 7.20 மீ சாலைகளுக்கு | 1.50 x 1.50 மீ. |

**நிபந்தனைகள் :**

1. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலகத்திற்கு அனுப்பப்படவில்லை என்றும் தலைவர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
2. அரசாணை எண் : 71, ஊ.வ.துறை நாள்: 16.06.2003 (அ) அரசாணை எண் : 134, ந.நி.(ம) கு.வ.துறை, நாள்: 20.09.2002–ன்படி சாலைகள் ஒதுக்கீட்டினை உள்ளாட்சிக்கு மனுதாரரால் தானமாக ஒப்படைப்பு செய்யப்படவேண்டும். மேற்படி அரசாணையில் தெரிவிக்கப்பட்டவாறு நில உரிமைக்கு உள்ளாட்சியே பொறுப்பு என்பதுடன் உள்ளாட்சியினால் வழங்கப்பட்ட நில உரிமை சான்றின் அடிப்படையிலேயே இம்மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது.
3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
4. விற்பனைக்குண்டான மனைகள் விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்பு துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
5. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றமின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'0" x 4'0" அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
6. The Necessary Charges to be collected as per G.O. M.s. No. 79, Housing & Urban Development Department (UD4(3)), dt. 04.05.2017.
7. அரசாணை எண்.181, நாள்.09.12.2020–ல் குறிப்பிட்டுள்ள வழிகாட்டுதல்களை தவறாமல் அனுசரிக்கப்பட வேண்டும்.
8. மனுதாரர் மனைப்பிரிவில் அமைந்துள்ள உத்தேச சாலைகள், பூங்கா மற்றும் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பகுதிகளை வருவாய் துறையின் உட்பிரிவு செய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.

**ம. வ. / மா. ந. ஊ. அ. (வே.மா.) எண் : 26 / 2023**

இணை இயக்குநர் ,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
வேலூர் மாவட்டம்.